**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED QUARRYING OF ROUGH STONE & GRAVEL BY M/S. K. VAZHAITHOTTA GOUNDER ROUGH STONE & GRAVEL QUARRY, S.F.NO. 80/2B(P) & 81/2(P) OF 2.48 HECTARES, KARUNCHAMIGOUNDAM PALAYAM VILLAGE, MADUKKARAI TALUK, COIMBATORE DISTRICT ON 19.04.2023 AT 11.00 A.M AT M/S VRV THIRUMANA MANDAPAM, NACHIPALAYAM VILLAGE, MADUKKARAI TALUK, COIMBATORE DISTRICT.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Mrs.P.Subha Nandhini | : | **Deputy Commissioner (Excise) / District Revenue Officer, Coimbatore District** |
| 2 | Dr. R. Chandrasekaran | : | **District Environmental Engineer,** Tamil Nadu Pollution Control Board, Coimbatore South. |
| 3. | Mrs.D.Pricilla | : | **Assistant Engineer,** Tamil Nadu Pollution Control Board, Coimbatore South. |
| 4. | Thiru. A.Vignesh kumar | : | **Assistant Engineer,** Tamil Nadu Pollution Control Board, Coimbatore South. |
| 5. | Thiru.K.Vazhaithotta Gounder | | Project Proponent **(M/S. K. VAZHAITHOTTA GOUNDER ROUGH STONE & GRAVEL QUARRY)**,Coimbatore District. |
| 6. | Thiru. S.Rajkumar | : | EIA Consultant, M/s Geo Exploration and Mining Solutions, Salem, Tamil Nadu |
| 7. | Public | : | 50 Nos. (List enclosed as Annexure) |

*********

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South welcomed the Deputy Commissioner (Excise) / District Revenue Officer, Coimbatore District, Revenue Officials, all general public and project proponents who have attended the public hearing for the Proposed quarrying of Rough Stone & Gravel by **M/s. K. Vazhaithotta Gounder Rough Stone & Gravel Quarry**, S.F. No. 80/2B(P) & 81/2(P) of 2.48 hectares, Karunchamigoundampalayam Village, Madukkarai Taluk, Coimbatore District. Some projects required to get Environmental Clearance (EC) from the Ministry of Environment, Forest and Climate Change (MoEF &CC), Government of India as per EIA Notification, 2006. He added that the public notice informing the conducting of Public Hearing was published in **"Dinathanthi"** and **"Indian Express"** dated 17.03.2023 and also pointed out that the EIA report and Executive summary are made available for public reference at specific Offices and informed that the project consultant will make a presentation on the proposed project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South also stated that the views, suggestions and queries of the public and reply by the project consultant will be recorded through videography / Audio and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

Deputy Commissioner (Excise) / District Revenue Officer, Coimbatore District, has initiated the Public Hearing process and requested the project consultant to explain about their proposed project through power point presentation about the Proposed Project and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru. S.Rajkumar EIA Consultant, M/s Geo Exploration and Mining Solutions, Salem, Tamil Nadu of the proposed project has made presentation about the proposed project to the public along with Environmental Management Plan.

Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South has invited the public to express their views and comments about the proposed Project. The views and suggestions of the public are detailed below:

**1. Mr. Veluchami - Palathurai :-**

My name is Veluchami and I live in Palathurai village. I am a lorry driver, many lorries are not running properly since quarry license is not renewed. We are unable to pay the monthly instalments of the loan purchased on the truck. Many families who depend on this quarry are in a difficult situation without getting food. Hence, he requested to grant license to this quarry.

**2. Mr. Ramasamy - Kaliapuram:-**

He welcomed all the participants. About 100 families depend on the Vazhaithotta Gounder Rough Stone & Gravel Quarry. We are struggling for work for the last 2 years as the quarry has been closed. He requested permission to this quarry and issue an order to re-open this quarry. Thank you.

**3. Mr. Nachimuthu- Palathurai :-**

My name is Nachimuthu from Palathurai village. Since the quarry was closed, I have been working in another place. I kindly request you to grant permission to this quarry.

**4. Mr. Venugopal – Kadappa, AP :-**

My name is Venugopal. He welcomed all the government officials and villagers who have come here. We all were fine when this quarry was in operation. It should be reported that there is no objection to operate this quarry.

If there is any other problem, a coordination committee can be set up and solved. Also, schools development, water development, temples development facilities can be done. A medical camp should be conducted every month for the employees working in this quarry. I think the villagers will cooperate to reopen this quarry. Green plantation should be developed in the quarry to prevent air pollution. I agree to open the quarry. Thank you for giving me the opportunity to speak.

**5. Mr. Balasubramaniam: - Karunchamigoundampalayam**

I am living in Karunchamigoundampalayam where this quarry is existing since 1983, I have been working as a lorry driver in the quarries. Our livelihood was very good as

the quarry was active. Since the license has not been renewed for last two years, we are unemployed and suffers a lot. If permission is given to carry out the quarry activities again, we assure to take action against air pollution. We also expect that the construction activity will be flourishing. About 200 people will get proper employment, if permission is granted to conduct this quarry, our livelihood will improve. Thank you.

**6. Mr. Senthilkumar - Palathurai:-**

My name is J.Senthilkumar and I am working as a driver. For the last 2-3 years we are unemployed due to lack of quary license. 100-200 people will get employment if this license is renewed to this quarry. We request to give permission to operate this quarry again. Thanks

**7. Mr. Karuppannan - Dharmapuri: -**

My name is Karuppannan, I am from Dharmapuri District, our group of 30 families are working in this quarry. He informed that their life quality is becoming poor due to lack of license to quarry.

**8. Mr. K. Nataraj- Karunchamigoundampalayam : -**

My name is Nataraj from Karunchamigoundampalayam. License shall be issued to the quarry to operate in our area. The quarry owners are donating generously to public works in this area. I have no objection to issue license to operate this quarry.

**9. Mr. Maruthachalam Karunchamigoundampalayam : -**

I would like to express my gratitude to the public for coming here and also to the teacher who participated and raised clarifications. If this quarry is operational condition, they will support us in every way. They also provided water supply facility both in morning and evening. We have no restrictions on mining here.

**10. Mr. Krishnasamy - Pachapalayam :-**

I welcome all the officials of The Tamil Nadu Pollution Control Board, the project proponent of M/s. K. Vazhaithotta Gounder Rough Stone & Gravel Quarry and the general public who have come here to attend the public hearing meeting.

The issuance of quarry licenses will provide a livelihood to the people living below poverty line. In the last two years, around 50 families have shifted to other area, losing their job due to lack of license. Licensing this quarry would be very helpful. He requested to use minimum explosives in the quarry in future as the supply quantity of explosives is sanctioned by the District administration. But some workers use too much quantity of explosives without the knowledge of the owner of the quarry causing disturbance to the public near village boundaries. He requested the district authorities and the quarry owner to monitor and rectify this issue.

He also requested to carry the sanctioned quantity of material in the lorries. There is no other objections. The income from minerals in the panchayat is supporting the development of the panchayat. He assured to cooperate in the coming period. He requested not to use too much explosives and not to carry over load in trucks, otherwise I am 100% support to grant a license for that quarry.

**11. Mr. Vellingiri - Pachapalayam:-**

I am Vellingiri from Pachapalayam village and I have been working in quarry for last 30 years. Now, I am jobless and living in poor condition. He requested to issue license.

**12. Mr. Sudarshan - Hyderabad :-**

My name is Sudarsan. I am NGO. I welcome this public hearing regarding the discussion on Environmental pollution in 2.48 hectares of quarry. Unemployment is important issue in India. In that sense, I fully support the quarry activities. Do not use prohibited explosives. He requested to protect the environment and give employment to local public. He requested owners to discourage child labour. I extend my support my support to issue of quarry licences.

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South requested AE to deliver vote of thanks. She thanked Public, Environmentalists, NGOs and District Administration for convening the meeting peacefully. DEE also informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project consultant are recorded

through videography / Audio and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

List of participants attended the public hearing meeting along with photographs and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

| | |
|---|---|
| **District Environmental Engineer**<br>**Tamilnadu Pollution Control Board**<br>**Coimbatore South** | **Deputy Commissioner (Excise)**<br>**District Revenue Officer**<br>**Coimbatore District** |

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**கோயமுத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், கருஞ்சாமிக்கவுண்டன்பாளையம், க.ச.எண் 80/2B(P) மற்றும் 81/2(P)ல் 2.48 ஹெக்டெர்ஸ் பரப்பில் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. கே. வாழைத்தோட்ட கவுண்டர் ரஃப் ஸ்டோன் மற்றும் கிரேவல் குவாரி திட்டத்திற்கு கோயமுத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், நாச்சிபாளையம் கிராமத்தில் அமைந்துள்ள வி.ஆர்.வி. திருமண மண்டபத்தில் 19.04.2023 அன்று காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.**

திட்டத்தின் பெயர்

திரு. கே. வாழைத்தோட்ட கவுண்டர் ரஃப் ஸ்டோன் மற்றும் கிரேவல் குவாரி எண் 80/2B(P) மற்றும் 81/2(P), கருஞ்சாமிக்கவுண்டன்பாளையம் கிராமம், மதுக்கரை கோயமுத்தூர் மாவட்டம் (மொத்த பரப்பளவு 2.48 ஹெக்டெர்ஸ்).

பங்கேற்றோர்;–

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.பி. சுபா நந்தினி | : | துணை ஆணையர் (கலால்) / மாவட்ட வருவாய் அலுவலர் கோயம்புத்தூர் மாவட்டம். |
| 2 | Dr. R. சந்திரசேகரன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் , தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 3. | திருமதி. D. பிரிசில்லா | : | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 5. | திரு. A.விக்னேஷ்குமார் | : | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 6. | தி/ள் கே. வாழைத்தோட்ட கவுண்டர் | | உரிமையாளர் தி/ள் கே. வாழைத்தோட்ட கவுண்டர் ரஃப் ஸ்டோன் மற்றும் கிரேவல் குவாரி |
| 13. | திரு. S. ராஜ்குமார் | : | திட்ட ஆலோசகர், ஜியோ எக்ஸ்புரேசன் அண்டு மைனிங் சொல்யுசண்ஸ், சேலம், தமிழ்நாடு. |
| 14. | பொதுமக்கள் | : | 50 எண்ணிக்கை |

கோயமுத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், கருஞ்சாமிக்கவுண்டன்பாளையம் கிராமம் க.ச.எண் 80/2B(P) மற்றும் 81/2(P)ல் அமைந்துள்ள 2.48 ஹெக்டெர்ஸ் பரப்பில் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. கே. வாழைத்தோட்ட கவுண்டர் ரஃப் ஸ்டோன் மற்றும் கிரேவல் குவாரி திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த உயர்திரு. துணை ஆணையர் (கலால்) / மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களையும், பொது மக்களையும் மற்றும் ரஃப் ஸ்டோன் மற்றும் கிரேவல் குவாரி உரிமையாளர் அவர்களையும், கோவை மாவட்டம், கோயமுத்தூர் தெற்கு அலுவலக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் வரவேற்றார்.மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் 2006–ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி 8 வகையான தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும் என்பது அவசியம் என்றும், அவ்வாறு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறும் போது பொதுமக்களின் கருத்துக்களை கேட்டு அதை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கும் மற்றும் மத்திய சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கும் சமர்ப்பிக்க வேண்டுமென்பது விதியாகும். அதன்படி இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஆகிய நாளிதழ்களில் 17.03.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததையும் மற்றும் தேவையான அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்காக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் வைக்கப்பட்டிருந்ததாக சுட்டிக்காட்டினார். மேலும், இத்திட்டம் தொடர்பாக குவாரி உரிமையாளர்களின் சார்பாக அவருடைய திட்ட ஆலோசகர் ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் எனவும், அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும், இவையனைத்தும் ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் / தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

துணை ஆணையர் (கலால்) / மாவட்ட வருவாய் அலுவலர், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். அவர் பொதுமக்கள் எடுத்துரைக்கும் சுற்றுச்சூழல் சம்மந்தமான கருத்துக்களை பதிவு செய்வது இக்கூட்டத்தின் நோக்கம் என்று கூறினார். பின்னர் ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் திட்ட ஆலோசகரால் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரிகள் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

அதனை தொடர்ந்து ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் S. ராஜ்குமார், ஜியோ எக்ஸ்புரேசன் அண்டு மைனிங் சொல்யுசண்ஸ், சேலம், தமிழ்நாடு அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்ட செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் தற்போது காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்ட இந்த ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை பதிவு செய்யலாம் எனவும் அவை வீடியோவிலும் பதிவு செய்யப்படும் எனவும் கூறினார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை பதிவு செய்தனர், ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொது மக்கள் கருத்துக்கள்**

1. **திரு. வேலுச்சாமி அவர்கள் – பாலத்துறை :–**

வேலுச்சாமி என்னும் நான் பாலத்துறை கிராமத்தில் வசிக்கின்றேன். நான் ஒரு லாரி டிரைவர், குவாரி லைசன்ஸ் புதுபிக்கபடாததால் பல லாரிகள் சரிவர இயங்குவதில்லை. லாரியின் மீது வாங்கப்பட்ட கடனுக்கு உண்டான மாத தவனை – செலுத்த முடியாத சூழ்நிலையில் உள்ளோம். இந்த குவாரியை நம்பி உள்ள பல குடும்பங்கள் தற்போது உண்ண உணவின்றி பெரிதும் துயரத்தில் உள்ளனர். இந்த துயரங்கள் நீங்க குவாரிக்கு லைசன்ஸ் வழங்க வேண்டும்.

2. **திரு. ராமசாமி அவர்கள் – காளியாபுரம்:–**

இங்கு வருகை தந்துள்ள அனைவருக்கும் நன்றி. இந்த வாழைத்தோட்ட கவுண்டர் குவாரி சார்ந்து சுமார் 100 குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாங்கள் கடந்த இரண்டு ஆண்டுகாலமாக குவாரி மூடப்பட்டிருந்த போது வேலைக்காக மிகவும் திண்டாடிக் கொண்டிருக்கிறோம். இந்த குவாரிக்கு அனுமதி வழங்கலாம் எங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றி இந்த குவாரியை மீண்டும் திறக்க உத்தரவு வழுங்குமாறு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். நன்றி வணக்கம்

3. **திரு. நாச்சிமுத்து அவர்கள்– பாலத்துறை : –**

பாலத்துறை கிராமத்தை சார்ந்த நாச்சிமுத்து என்னும் நான். இந்த குவாரி மூடப்பட்டிருந்த நாள் முதல் இரண்டு ஆண்டுகளாக வேறு இடத்திற்கு வேலைக்கு சென்று கொண்டு இருக்கின்றேன் இந்த குவாரி நடத்த அனுமதி வழங்குமாறு தாழ்மையுடன் பணிவண்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

4. **திரு. வேணுகோபால் அவர்கள்:– கடப்பா**

எனது பெயர் வேணுகோபால் . இங்கு வருகை புரிந்துள்ள அரசு அலுவலர்கள், ஊர்பொதுமக்கள் எல்லோருக்கும் வணக்கம், இந்த குவாரி செயல்பாட்டில் இருந்த போது நாம் எல்லோரும் நன்றாக இருந்தோம். இந்த குவாரியை நடத்த எந்த ஒரு ஆட்சேபணையும் இல்லை.

வேறு ஏதாவது பிரச்சனை இருந்தால் Co–Ordination கமிட்டி அமைத்து அதற்கு தீர்வு காணலாம். மேலும், பள்ளிகளில் மேம்பாட்டு பணிகள், தண்ணீர் விநியோகம், கோவில்கள்

புனரமைப்பு ஆகிய வசதிகளை செய்யலாம். இந்த குவாரியில் பணிபுரியும் ஊழியர்களுக்காக ஒவ்வொரு மாதமும் மருத்துவ முகாம் நடத்த வேண்டும். ஆம்புலன்ஸ் வசதி ஏற்பாடு செய்யலாம். கிராம மக்களுக்கு இந்த குவாரியை மீண்டும் துவக்க ஒத்துழைப்பார்கள் என்று நான் நினைக்கின்றேன். குவாரியை சுற்றி மரக்கன்று நட்டு காற்று மாசுபடுவதை தடுக்க வேண்டும் இந்த . குவாரியை திறக்க நான் ஆதரவு அளிக்கிறேன். எனக்கு பேச வாய்ப்பளித்தற்கு நன்றி

5. திரு. பாலகப்பிரமணியம் அவர்கள் : – கருஞ்சாமிக்கவுண்டன்பாளையம்

அனைவருக்கும் வணக்கம், நாள் இந்த குவாரி உள்ள கருஞ்சாமிகவுண்டன்பாளையத்தில் வசிக்கின்றேன். 1983ம் ஆண்டு முதல் குவாரியில் சம்பந்தப்பட்ட லாரி டிரைவராக நான் வேலை செய்கிறேன். குவாரி செயல்பாட்டிலிருந்ததால் எங்களது வாழ்வாதாரம் மிகவும் நல்ல நிலையில் இருந்தது. கடந்த இரண்டு ஆண்டு காலமாக லைசன்ஸ் புதுபிக்கப்படாததால் நாங்கள் வேலையின்றி பாதிக்கப்பட்டு வேதனையில் உள்ளோம். மீண்டும் குவாரி நடத்த அனுமதி வழங்கினால் நாங்கள் சுற்றுச்சுழல் காற்று மாசுபடாமல் பார்த்துக் கொள்வதோடும், கட்டுமானத் தொழில் நான்றாக நடக்கும், என்பதை எதிர்பார்க்கின்றோம். சுமார் 200 நபர்களுக்கு வேலை கிடைக்கும், இந்த கல்குவாரி நடத்த அனுமதி வழங்கினால், எங்களது வாழ்வாதாரம் மேம்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

6. திரு செந்தில்குமார் அவர்கள்: – பாலத்துறை

ஜெ.செந்தில்குமார் என்கின்ற நான் டிரைவராக வேலை பார்த்து வருகின்றேன். கடந்த 2–3 ஆண்டுகாளக கல்குவாரி லைசன்ஸ் இல்லாத காரணத்தினால் நாங்கள் வேலை இல்லாமல் இருக்கின்றோம். இந்த லைசன்ஸ் வழங்கினால் 100–200 நபர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு மீண்டும் இந்த குவாரியை நடத்த அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். நன்றி

7. திரு. கருப்பண்ணன் அவர்கள் : – தர்மபுரி

எல்லோருக்கும் வணக்கம் எனது பெயர் கருப்பண்ணன், நான் தருமபுரி மாவட்டம், நாங்கள் 30 குடும்பங்கள் குவாரியில் பணிபுரிந்து வருகின்றோம். தற்போது குவாரி நடத்த லைசன்ஸ் இல்லாத காரணத்தினால் நாங்கள் அனைவரும் மிகுந்த வறுமையில் உள்ளோம் என்பதை தெரிவித்தார்.

8. திரு. கே.நடராஜ் அவர்கள்: – கருஞ்சாமிக்கவுண்டன்பாளையம்

எனது பெயர் நடராஜ் கருஞ்சாமிக்கவுண்டன்பாளையம் எங்கள் பகுதியில் குவாரி நடத்த லைசன்ஸ் வழங்கலாம் இந்த பகுதியில் நடக்கும் எந்தவொரு பொது வேலைக்கும் நன்கொடை வழங்கி சிறப்பாக ஆதரவு செய்கிறார்கள். இந்த குவாரியை நடத்த லைசன்ஸ் வழங்க தடையில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

9. திரு. மருதாசலம் அவர்கள் :– கருஞ்சாமிக்கவுண்டன்பாளையம்

இங்கு வருகை புரிந்துள்ள பொதுமக்களுக்கும் பொது கேள்வி கேட்டுக் கொண்ட ஆசிரியர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கல்குவாரி செயல்பாட்டில் இருந்தால் எங்களுக்கு எல்லா வகையிலும் துணையாக இருப்பார்கள், தண்ணீர் வசதி ஏற்படுத்தி கொடுக்கிறார்கள். எங்களுக்கு இங்கு குவாரி நடத்த எந்தவொரு தடையும் இல்லை. எங்களுக்கு தண்ணீர் தேவைப்பட்டால் காலை ஒரு வேளை மாலை ஒரு வேளை என இருவேளையும் தண்ணீர் கொண்டு வந்துள்ளார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

10. திரு. கிருஷ்ணசாமி அவர்கள் :– பச்சாபாளையம்

இங்கே வருகை தந்துள்ள தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அதிகரி அவர்களுக்கும் குவாரி லைசன்ஸ்க்காக பதிவு செய்த திரு. கே. வாழைத்தோட்டத்து கவுண்டர் அவர்களுக்கும் இங்கு கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்துள்ள பொது மக்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்..

பாறை லைசன்ஸ் வழுங்கப்படுவதினால் இந்த பகுதியில் வாழும் வறுமை கோட்டிற்கு கீழே உள்ள மக்களுக்கு ஒரு வாழ்வாதாரமாக இருக்கும். கடந்த இரண்டு ஆண்டுகாலமாக லைசன்ஸ் இல்லாததால், வேலை இழந்த சுமார் 50 குடும்பங்கள் வெளி வேலைக்கு செல்கின்றனர். இந்த பாறைக்கு லைசன்ஸ் கொடுத்தால் மிகவும் உதவியாக இருக்கும். மேலும் வரும் காலகட்டத்தில் அந்தபாறைக்கு வைக்கும் வெடி மருந்தின் அளவை குறைத்து வைக்க வேண்டும் என்பது எனது வேண்டுகொள். ஏனென்றால் மாவட்ட நிர்வாகத்திலிருந்து தான் மருந்தின் அளவு வழங்கப்படுகின்றது என்று கூறுவார்கள். ஆனால் ஒரு சில ஊழியர்கள் அதை பாறையின் உரிமையாளருக்கு தெரியாமல் அளவுக்கு அதிகமான மருந்து வைப்பதினால் ஊர் எல்லைப்பகுதிகளுக்கு தொந்தரவு ஏற்படுகிறது. இதை மாவட்ட அதிகாரிகளும் பாறை உரிமையாளரும் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

மேலும், குவாரியில் கற்கள் ஏற்றும் போது அளவான லோடு ஏற்றி செல்ல வேண்டும் என்றார். இதனால் வேறு எந்தவொரு இடைஞ்சலும் இல்லை. குவாரி மூலம் ஊராட்சிக்கு கனிமவள நிதி கிடைக்கிறது. அந்த வருமானம் ஊராட்சியின் வளர்ச்சிக்கு மிக உறுதுணையாக உள்ளது என்பதை தெரிவிக்கிறேன் அதிகளவு வெடி மருத்துகளை பயன்படுத்த வேண்டாம் என்றும், அதிகஅளவு கற்களை லாரியில் ஏற்றி செல்ல வேண்டாம் என்பது அப்பகுதி பொது மக்களின் வேண்டுகொள், மற்றபடி அந்த பாறைக்கு லைசன்ஸ் வழங்க எனக்கு 100% சதவீதம் முழு சம்மதம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்

11. திரு. வெள்ளிங்கிரி அவர்கள் :– பச்சாபாளையம் .

நான் பச்சாபாளையம் கிராமத்தை சார்ந்த வெள்ளிங்கிரி என்றும் நான் கடந்த 30 ஆண்டுகாலமாக குவாரியில் பணியாற்றி வருகின்றேன். தற்போது வேலையில்லாமல் மிகவும் வறுமையில் உள்ளோம் இந்த குவாரிக்கு லைசன்ஸ் வழங்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்

12. திரு. சுதர்சன் அவர்கள்:–ஐதராபாத்

என் பெயர் சுதர்சன் NGO, இன்றைய தினம் 2.48 ஹெக்டர் அளவு கொண்ட இக்குவாரி சுற்றுச்சுழல் மாசுப்படுவது குறித்தும் இந்த பொது மக்கள் கருத்துக் கேட்ட கூட்டத்தை நான் வரவேற்கின்றேன். இந்தியாவில் வேலையில்லா திண்டாட்டம் முக்கியயாக உள்ளது. அந்த வகையில் நாள் கல்குவாரிக்கு முழு ஆதரவளிக்கின்றேன். தடைசெய்யப்பட்ட வெடி மருந்துகளை பயன்படுத்த வேண்டாம். சுற்றுச்சூழலுக்கு ஏதேனும் தீங்கு விளைவிக்காத வண்ணம் பாதுகாக்க வேண்டும். உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்றார். குழந்தை தொழிலாளர்களை ஊக்குவிக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன். நான் குவாரி லைசன்ஸ் வழங்க முழுமையாக ஆதரவு தெரிவிக்கின்றேன்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் :

இந்த கூட்டத்தில் பங்கேற்று பல்வேறு கருத்துக்களை கூறிய பொதுமக்கள் சுற்றுச்சூழல் ஆர்வலர், சமூக செயல்பாட்டாளர்கள் ஆகியோருக்கு மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பாக திருமதி. D.பிரிசில்லா, உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் அவர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது, கூட்ட நிகழ்வுகள் காணொளி மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது,

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, காணொளி, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

| | |
|---|---|
| 26/5/23<br>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்<br>கோயம்புத்தூர் தெற்கு | 26/5/23<br>துணை ஆணையர் (கலால்) /<br>மாவட்ட வருவாய் அலுவலர்<br>கோயம்புத்தூர் மாவட்டம். |